**செய்தி வெளியீடு எண்: 449** **நாள்: 12.07.2018**

**ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம்**

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்ட விழிப்புணர்வு கூட்டம் காவல்துறை இயக்குநர் திரு.T.K.ராஜேந்திரன் இகாப, தலைமையில் கருவூலக்கணக்குத் துறை, **முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் திரு தென்காசி சு ஜவஹர், இஆப.,** அவர்களின் முன்னிலையில் 11.07.2018 பிற்பகல் 3.30 மணியளவில் காவல்துறை இயக்குநர் அலுவலகம், **சென்னை - 04ல் நடைபெற்றது.**

இக்கூட்டத்தில் சென்னை, கருவூலக் கணக்குத்துறை, **முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர், திரு தென்காசி சு ஜவஹர், இஆப,** அவர்கள் தெரிவித்ததாவது:

நிதி மேலாண்மை தொடர்பான அரசுப் பணிகள் திறம்பட நடைபெற, மாநில அரசு நிதி மேலாண்மை மற்றும் மாநில அரசு மனித வள மேலாண்மையை இணைத்து ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. தற்பொழுது நடைமுறையில் உள்ள தன்னியக்க கருவூலப் பட்டியல் ஏற்பளிக்கும் முறை, வலை தள சம்பளப் பட்டியல் மற்றும் மின்னணு வழி ஓய்வூதியம் ஆகியன இத்திட்டத்தில் சேர்க்கப்படவுள்ளன. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக, அரசு ரூபாய் 288.91 கோடி ஒப்பளிப்பு செய்து அரசாணை வழங்கியுள்ளது.

இத்திட்ட ஒருங்கிணைப்பு நிறுவனமாக திருவாளர் விப்ரோ லிட்., நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்தக் கூடிய அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கான பணிகளும் மென்பொருள் உருவாக்கும் பணிகளும் தற்சமயம் முடிவுற்றுள்ளன. இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது பல்வேறு துறை பணியாளர்கள் கருவூலத்திற்கு பட்டியல் சமர்ப்பிக்க நேரடியாக செல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது. இத்திட்டத்தில் மாநில கணக்காயர், பாரத ரிசர்வ் வங்கி, முகமை வங்கிகள், பொது கணக்கு கட்டுப்பாட்டாளர் ஆகியோர் ஒருங்கிணைக்கப்படுவர்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள சுமார் 29000 பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் (Drawing and Disbursing Officers) நேரடி இணையத்தின் மூலம் சம்பளப்பட்டியல் மற்றும்

இதர பட்டியல்களை கருவூலத்தில் சமர்ப்பிக்க இயலும். மேலும் இத்திட்டத்தில் பட்டியல்கள் ஏற்பளிக்கப்பட்ட விபரம் மற்றும் வங்கிக்கு அனுப்பப்பட்ட விபரம் பணம் பெற்று வழங்கும் அலுவலர்களால் அறிய இயலும். இதனால் மதிப்புமிகு மனிதவளம் சேமிக்கப்பட்டு அலுவலகத்தில் பிறமுக்கிய பணிகளை மேற்கொள்ள இயலும். மேலும் இத்திட்டத்தில் அரசின் வருவாயினை இணையவழி மூலம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளதால் அரசின் நிகழ் நேர வரவினை உடனுக்குடன் அறிய இயலும். நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் எண்ம ஒப்பம் (Digital Signature) மற்றும் விரல் ரேகைப் பதிவுமுறை (Biometric) மூலம் உறுதிப்படுத்துவதன் மூலம் மாநிலத்தின் நிதி நிலை விபரம் உடனுக்குடன் அரசுக்குக் கிடைப்பதுடன் நிதி மற்றும் மனித வள மேலாண்மை நிர்வாகம் சிறப்பாக நடைபெற வழி வகுக்கும். தேவையற்ற கால தாமதமும் முறைகேடுகளும் தவிர்க்கப்படும். தற்சமயம் பட்டியல்கள் ஏற்பளிக்கப்பட்டு வங்கிக்கணக்குகளில் வரவுவைக்க சராசரியாக ஆறு நாட்கள் ஆகின்றன. இப்புதிய திட்டத்தில் பட்டியல்கள் ஏற்பளிக்கப்பட்டு அன்றைய தினம் வங்கிக் கணக்குகளில் வரவுவைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போது சம்பளக் கணக்கு அலுவலகங்களில் நடைமுறையிலுள்ள முன்தணிக்கை முறை மாவட்டங்களிலுள்ள அனைத்து கருவூலங்களுக்கும் (சார்கருவூலங்கள் உட்பட) விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் சுமார் 9 இலட்சத்திற்கும் மேற்பட்ட அரசுப் பணியாளர்களின் பணிப்பதிவேடு பராமரிப்பு எளிமையான முறையில் கணினி மயமாக்கப்பட்டு சம்பளப்பட்டியல், பதவி உயர்வு, மாறுதல்கள், விடுப்பு மற்றும் இதர விபரங்கள் அவ்வப்போது உடனுக்குடன் பதியப்படும். இப்பணியினை 2018க்குள் முடித்திட திட்டமிடப்பட்டுள்ளது. அரசுப் பணியில் சேர்ந்தது முதல் ஓய்வு பெறும் வரை உள்ள அரசுப் பணியாளர்களின் பணி வரலாறானது முழுமையாக இத்திட்டத்தின் மூலம் கணினிமயமாகிறது. இத்திட்டத்தில், பணியாளர்கள் அவர்களது பணிப்பதிவேடுகளை செல்பேசி மற்றும் கணினி மூலம் பார்வையிட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் பணிப்பதிவேடுகளைப் பராமரிக்கும் பணியிலிருந்து விடுபட்டு அலுவலர்கள் தங்களது துறையின் ஆக்கபூர்வப் பணிகளில் ஈடுபடமுடியும். இதனால் பல்வேறு அலுவலகங்களுக்கு இடையேயும் வெவ்வேறு ஊர்களுக்கு இடையில் பணிப்பதிவேடுகள் மாற்றப்படுவதால் ஏற்படும் காலவிரயம் குறைவதோடு, பணிப்பதிவேடு காணாமல் போகக்கூடிய சூழ்நிலையும், சேதமடைவதும் தவிர்க்கப்படும். பணிப்பதிவேடுகள் அவ்வப்போது கணினி மூலம்

ஆய்வு செய்யப்படுவதால் நடவடிக்கைகள் உடனுக்குடன் எடுக்கப்பட்டு ஓய்வூதியம் தாமதமின்றி வழங்கப்படும். பணியாளர் தொடர்பான அரசின் ஆய்வுக்கும் திட்டமிடலுக்கும் இக்கணினி ஆவணங்கள் உதவும். ஆதாரப் பூர்வமான பணி விபரங்கள் கணினியில் இருப்பதினால் பணிமாற்ற முடிவுகள் தாமதமின்றி முறையாக எடுக்கப்படும். காவல்துறையின் பலபிரிவுகளில் அடிக்கடி பணிமாற்றம் இருப்பதால் பணிப்பதிவேடுகளை பல இடங்களுக்கு அனுப்புவதால் ஏற்படும் சேதங்கள் தடுக்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ், சம்பளம் மற்றும் சம்பளம் சாரா பட்டியல்கள் தயாரித்தல், மின்னணு பணிப்பதிவேடு பராமரித்தல். ஓய்வூதிய கருத்துருக்கள் தயாரித்தல் மற்றும் இதர இனங்கள் தொடர்பாக அனைத்து துறை அலுவலர்களுக்கும் மேலும் பட்டியல் கடவு செய்தல், காப்பறை செயல்பாடுகள், மின்னணு அலுவலகம், மற்றும் இதர இனங்கள் குறித்து கருவூலத்துறை அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

காவல்துறை இயக்குநர் அவர்கள் இத்திட்டம் மிகச்சிறப்பான திட்டம் என்றும், இத்திட்டத்தை காவல்துறை உரிய காலத்திற்குள் நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கைகளை தலைமையிடத்தில் இருக்கும் காவல்துறை அதிகாரிகள் மேற்கொள்ளவேண்டும் என்றும், மாநிலம் முழுவதும் உள்ள காவல்துறை அலுவலர்கள் ஒத்துழைப்பும் வழங்க வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில் திரு.விஜயகுமார், இகாப, கூடுதல் காவல்துறை இயக்குநர் (சட்டம் ஒழுங்கு), திரு.பி.கந்தசாமி, இகாப, கூடுதல் காவல்துறை இயக்குநர் (நிர்வாகம்), திரு.எம்.ரவி, இகாப, கூடுதல் காவல்துறை இயக்குநர் (தலைமையிடம்), திரு.ஏ.பி. மகாபாரதி, கூடுதல் இயக்குநர் (மின் ஆளுகை), கருவூல கணக்குத்துறை, திருமதி. ஆர். மோகனா, கூடுதல் இயக்குநர் (திட்டங்கள்), கருவூல கணக்குத்துறை, திருமதி. வி.சத்யா,கூடுதல் இயக்குநர் (புதிய ஓய்வூதிய திட்டம்), கருவூல கணக்குத்துறை, திரு.எஸ். கிருஷ்ணமூர்த்தி, சம்பள கணக்கு அலுவலர், (தலைமை செயலகம்), திருமதி. ஏ. வெங்கட லெட்சுமி, சம்பள கணக்கு அலுவலர், (தெற்கு) மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**